# போர்வாள்

திராவிடர் வார வெளியீடு

| வாள் | திருவள்ளுவர் ஆண்டு 1980 மார்கழி 3 | வீச்சு |
|---|---|---|
| 3 | 17—12—49 சனிக்கிழமை | 16 |

ஆசிரியர்கள்:





மனிதன் சுதந்தர புருஷனாகப் பிறக்கிறான், ஆனால் பிறகோ, அடிமைத் தளைகளால் கட்டுண்டு வதைகிறான்; இந்தத் தளைகள் அறுபடவேண்டும் என்று வீர முழக்கமிட்டான் பிரஞ்சுப் பேரறிஞன்.

ரூசோ

1½ அணா

ஆண்டுக் [illegible] 5

# பரிதாபத்திற்குரிய பதவிப் பித்தர்கள்!

ஏகாதிபத்திய எதிர்ப்பில் ஈடுபட்டிருந்த பொழுது, காங்கிரஸ் கட்சியினரை, எந்த அளவிற்கு, இத்துணைக் கண்டத்தின் குடி மக்கள் ஏற்றினரோ போற்றினரோ, அந்தப் போக்கில் புதியநிலை—தேவையான அளவில் இல்லையானாலும்—அரும்ப ஆரம்பித்து இருக்கிறது என்பதில் ஒரு துளியும் ஐயம் இல்லை. போர்க் களத்திலே புகுந்த ரணகளச் சூரியர்களாக காங்கிரஸ் தலைவர்கள் இருந்த பொழுது பொது மக்களும், அவர்களை அன்போடு நேசித்தனர்—பாராட்டினர்—வாழ்த்தினர்—வரவேற்றனர். எந்த நாட்டு விடுதலை வீரர்களுக்கும் காட்டப் பட்டிராத நிலையில், இந்தத் தியாகத் திருமேனிகளுக்குப் போதரவு காட்டப் பட்டது, பொதுமக்களால். தங்கள் பால் பொதுமக்கள் காட்டும் அன்புப் பெருக்கையும், பக்தி விஸ்வாசத்தையும் கண்டு கண்டு, அகமும் அங்கமும் பூரித்து மகிழ்ந்தனர் இந்த, விடுதலை வீரர்கள். நன்றி மறவாத நல்லவர்களாக, தங்கள் மீது மக்கள் வைத்திருந்த விஸ்வாசத்திற்கு ஈடாகத் தாங்களும், பொதுமக்களைப் போற்றினர்—புகழ்ந்தனர். இது இயற்கையேயாகும். இதில் ஒன்றும் முரண்பாடு இல்லை.

தியாகத்தழும்புகளைத் தாங்கும் துணிவும், சுற்றத்தாரைத் துறந்து சிறைக்கோட்டம் செல்லும்நெஞ்சுறுதியும், கொஞ்சம் சேவா உணர்ச்சியும், இருந்தாலே போதும், எவருக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் படைவரிசையில் தன்னையும் ஒரு போர் வீரராகப் பதிவு செய்து கொள்வதற்கு! இந்தத் தியாகப் பண்பாடுகள் எவர் எவரிடத்தில் இருக்கக் கண்டார்களோ பொது மக்கள், அவர்களைத் தம்மிலும் சிறந்தவர்களாகக் கருதினர்—மதித்தனர்—கொண்டாடி நின்றனர். அன்னார்களை, 'மாந்தரில் சிறந்தவர்கள்' என்று நினைத்து, பரம்பரை வழக்கப்படி பூஜா மனோபாவம் பெற்றுள்ள, பொதுமக்களின் இம் மன நிலையை என்றென்றும் நிரந்தரமாக நிலைத்திருக்கக் கூடியதென்று, தவறுதலாகத் தீர்மானித்துக் கொண்டனர் விடுதலைப்படை வீரர்கள்.

தியாக மூர்த்திகள் எதிர் பாராத நேரத்தில், பெரும் போரின் விளைவாக, ஏகாதிபத்தியம் தன்னைத் தானே தற்கொலை புரிந்து கொள்வதைத் தவிர்த்து வேறு வழி வகையில்லாத நிலையெய்தவும், அதனால் இந்தியத் துணைக் கண்டம் அரசியல் விடுதலை பெறவுமான சூழ்நிலை ஏற்படலாயிற்று. தக்ளி—கைராட்டை—எழுத்தாணி பனை ஓலை—பதனி—பனைவெல்லம்—வந்தே மாதரம் பஜனை மடம் என்று பேசிப் பேசி நாத்தழும்பேறியும், மூளை அழுக்கேறியும் போயிருந்த தேசபக்த தியாகிகளுக்கு, அரியாசனம் ஏறும் அரிய வாய்ப்புக் கிடைத்தது. ஏகாதிபத்தியப் பிடியால் மங்கிய வாழ்வு, மீண்டும் தங்களுக்குக் கிடைக்க மார்க்கம் ஏற்படும் இத்த மகாத்மா சீட கோடிகளின் ஆட்சியில்என்று மக்கள்நம்பிக்கை கொண்டனர். பிற நாடுகள் போன்று இத் துணைக் கண்டத்திலும் தொழில் வளம் பெருகும், துன்பம் தொலையும் என்று நினைத்து நினைத்து நெஞ்சு மகிழ்ந்தார்கள். வேலை கிடைக்கும்—வறுமை மடியும்—உணவு கிடைக்கும்-உடலும் உள்ளமும் உரம் பெறும்—அணிய ஆடை கிடைக்கும் அங்கம் பூரிக்கும்—கல்விகிடைக்கும் கருத்து வளம் பெறும்—குடியிருக்க வீடுகிடைக்கும் வாழ்வு விளக்கமுறும்—புதிய நிலை புதியநினைப்பைத் தரும்—என்று, தங்கள் போற்றுதலுக்கும் பக்தி விஸ்வாசத்திற்கும் பாத்திரமானவர்கள் பதவி பெற்றுள்ளதை வான் பார்க்கும் பயிர்போல் பொதுமக்கள் வாயைப் பிளந்து பார்த்துக்கொண்டு இருந்தனர். முடிவுஎன்ன?

பொதுமக்கள் எதிர்பார்த்தது கிடைத்ததா? எதிர்பார்த்தது கிடைக்கவில்லையானாலும், ஏற்கனவே இருந்துவந்த சர்வ சாதாரண வாழ்வாவது நிலைத்ததா? இல்லை என்று நாம் கூறினால், என்றென்றும் கருத்துப் பிளவு கொண்டோர் எதற்கெடுத்தாலும் 'இல்லை' என்று தான் பழித்துப் பேசுவர் என்று, நமது கூற்றை ஏற்க மறுப்பர் பூஜாமனோபாவிகள். அவர்களுக்குக் கூறுகிறோம், அவர்களால் பூஜிக்கப்பட்டவர்கள்—அதிலும் தலை சிறந்தவர்கள் இரண்டொருவர் கூறியுள்ளதை பின்னராவது நிலையை உணர்ந்து கொள்ளட்டும்—மக்களாட்சியை இம் மாநிலத்தில் உருவாக்க முயற்சிக்கட்டும்.

முன்பொருநாள் பொதுமக்கள் தங்களை அர்ச்சிக்கவும், அதை கேட்டுத் தாங்கள் ஆநந்தக்கூத்தாடி, பொதுமக்களைப் புகழ்ந்துபேசுவதுமான நிலை இருந்துவந்தது. பொருத்தமான குடும்ப முறை. பொதுமக்கள்—காங்கிரஸ் கட்சி ஆகிய இரண்டுக்கும் இருந்துவந்த அந்த நல்லுறவும் நசித்துக் கொண்டு வருகிறது. பொதுமக்கள், காங்கிரஸ் ஆளவந்தார்களை ஆத்திரத்தோடு நோக்கவும், அலட்சியமாகத் தூற்றவும், அதற்கு எதிராக காங்கிரஸ் அமைச்சர்கள், பொது மக்களைப் பழித்துப் பேசவும், பகைவர்களைப் பார்ப்பதுபோல் சந்தேகத்தோடு கண்காணிக்கவுமான நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு எவர் பொறுப்பாளி? இந்த ஆபத்தான நிலை ஏற்படுவதற்கு எது காரணம்?

ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் போது கூறப்பட்ட இனிமையான சொற்களைக் கேட்டுக் கேட்டு, இன்பக் கனவுகள் பல கண்டு கொண்டு இருந்தனர் மக்கள். ஏகாதிபத்தியம் அகன்றதும், தங்களுக்கு இஷ்டமானவர்கள் ஆட்சிப் பீடம் ஏறினதும், அன்று அவர்களால் சித்தரித்துக் காட்டப்பட்ட 'இன்பக் கனவுகள்' அனைத்தும் செயலளவில் அமுல் நடத்தப்படும் என்று பரிபூர்ணமாக நம்பி இருந்தனர். தினம் தினம், அந்த நம்பிக்கையைத் தங்கள் செய்கைகளால், தூளாக்கிவருகின்றனர் காங்கிரஸ் ஆட்சியாளர்கள்... தங்கள் கண்முன்பாகவே, எளிய வாழ்வில் காட்சியளித்து வந்தவர்கள், அமைச்சர்களாக அமர்ந்ததும் ஆடம்பர வாழ்வில் அமிழ்ந்திக் கிடப்பதையும் பார்க்கிறார்கள். இந்தக்காட்சி, ஆளவந்தார்களாக ஆவதற்குமுன் அவர்கள் கூறிவந்த வார்த்தைகளிலேயே வஞ்சகம்

லந்திருந்தது என்பதை உணர்ந்து கொள்ளாமல், அவர்கள் சொற்க ளில் வீண் நம்பிக்கை வைத்து மதி மோசம் போனேமே என்ற எரிச் சலைக்கொடுத்திருக்கிறது பொது மக்களுக்கு. நாளாக நாளாக வாழ் வின் சுமை பல படங்காகப் பெரு கிக் கொண்டே வேறு இருக்கிறது. மீள மார்க்கமும் விளக்கமாகத் தெரியாமல் விழிக்கிறார்கள். கனல் கக்க வேண்டிய கண்கள் கசக்கிக் காட்சியளிக்கின்றன. குமுறல் இருதயத்தோடு நின்று விடுகிறது. நெஞ்சு சபித்த எண்ணம் இருக்கி றது, இந்த நம்பிக்கை மோசம் செய்தவர்கள் செயல் கண்டு.

பொதுமக்கள் இருக்கும் இந்த அலங்கோலத்தைக் கண்டு, சிந்த னைக்கு வேலை கொடுப்பதற்குப் பதில் சீற்றத்தைத் துணைக்கழைக் கிறார்கள் காங்கிரஸ் ஆளவந்தார் கள். மக்களின் அன்பையும் ஆதர வையும் கேடயமாகக் கொண்டு நாடு சுற்றி வந்தவர்கள் போலீஸ் படையின் பாதுகாப்பில் பவனி வருவதைப் பெருமைக்குரியதாகக் கொள்ளுகிறார்கள். ஜனசக்தியைப் பெரிதெனக் கொண்டு விடுதலைப் பணிபுரிந்தவர்கள், சட்டத்தின் சக்திக்குமுன் ஜனசக்தி என்ன செய்து விடும் என்ற தீர்மானத் திற்கு வந்து விட்டிருக்கிறார்கள். இந்த இருசாராரின் மனப்போக் கிலும் மாறுதல்— இனி நேர் செய்ய முடியாத தன்மையில்—ஏற்பட்டு விட்டு இருக்கிறது. அந்தநாள் இருந்த உறவு குலைந்து பகை வளர்ந்து கொண்டு வருகிறது. ஒரு சாராரை மற்றொருசாரார் சந்தே கக் கண் கொண்டு பார்க்கிறார்கள். பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள சங்கடங்கள் களையப்பட்டா லன்றி இரு குழுவினருக்கும் மன ஒற்றுமையோ மனச்சாந்தியோ உண்டாக வழி பிறக்காது. [illegible]ற்க.

குடிநீர் வசதி வேண்டும். மருத் துவ வசதி வேண்டும். அஞ்சல் நிலையம் வேண்டும்.

எவ்வளவு சாதாரண, ஆனல் இன்றியமையாத மனிதத் தேவை கள் இவைகள் என்பதைச்சிந்திக்க வேண்டும். பருகநீர் கேட்டது கூட நம்மவர் ஆட்சியிலே, ஆட்சியாளர் கள் கோபத்தை மூட்டும் வேண்டு கோளாகி விடுகிறது. பிணிநீக்கின வாழ்வுதான் எல்லாவற்றிலும் சிறந் தது என்பதற்கு விளக்கம் தேவை இல்லை. ஒரு சிறிய மருத்துவச் சாலை வேண்டும் என்பதை இன் சொற்களால் எடுத்துக் காட்டுவது கூட, ஆட்சியாளர்களுக்கு இடுக் கண் சூழ எடுத்துச் சொல்லப் படும் எதிர்ப்புரையாகத் தெரிகிறது நமது ஆளவந்தார்களுக்கு! ஒரு அஞ்சல் நிலையம் அதாவது ஒரு தபாலாபீஸ் ஒரு சிற்றூருக்கு வேண்டும் என்று கேட்பதுகூட செந்தேளைக் கொட்ட விடுவது போல்குடைச்சலைத்தருகிறது நமது காங்கிரஸ்அமைச்சர்களுக்கு! நமது சென்னை சர்க்காரின் நிதி அமைச் சர் கோபாலர், இராஜமகேந்திரி வட்டத்தில் 9-12-49-ல் சுற்றிவந்தி ருக்கிறார். **காடியம்** என்ற சிற்றூ ரில் உள்ள நங்கையர் நல்வளாசசி கிளை நிலையம், அமைச்சருக்கு ஒரு வரவேற்பு வாசித்தளித்திருக்கிறது. அந்த வரவேற்பில், மேல் குறித் துள்ள மூன்று தேவைகளும் நிறை வேற துணை நிற்குமாறு அமைச் சரை கேட்டுக் கொள்ளப் பட்டிருக் கிறது. மற்றொரு தோழியர் மக்க ளின் குறைபாடுகளைக் காணத் தெரிய அமைச்சர் முன்வர வேண்டுமென்றும் பேசி இருக் கிறார்கள்.

இவ்வளவுதான் அங்கு நடந்தது. மந்திரி கோபாலர் கோபித்துக் கொண்டார். **'வரவேற்பா இது! வம்பளப்பு!'** என்று ஆத்திரத்தோடு அழ ஆரம்பித்து விட்டார். "மக் கள் கொஞ்சமும் நன்றி இல்லாத வர்கள். நாங்கள் செய்து முடித்த அரும் பெரும் சாதனைகளை எல் லாம் மறந்து விடுகிறார்கள். அது குறித்து ஒரு நல்ல வார்த்தை கூட கூற மறுக்கிறார்கள். வரவேற்பு இதழ் என்ற போர்வையில் தங்கள் குறைபாடுகளையும் தேவைகளையும் கேட்டு எங்களைத்தொல்லைப் படுத்து கிறார்கள். எங்களை சுமை தாங்கும் ஜந்துக்கள் என்று மக்கள் நம்பிக் கொண்டு இருக்கிறார்கள்" இவ் வாறு தமது வயிற்றெரிச்சல் முழு வதையும் கொட்டி அளந்து விட் டார்.

"தாம் செய்துள்ளதை மட்டுந் தான் மக்கள் மறந்துவிட்டார்கள்" என்பதில்லையாம், 'மற எந்த மந் திரி செய்ததையுந்தான்' மறந்து விட்டார்களாம் மக்கள். 'ஓரிடத் தில் மட்டுந்தான் இந்த நிலை' என் பதில்லையாம். 'எந்த இடத்திலும்' இதே நிலைதானும்!

இத்துடனும் நிற்கவில்லை, மந்திரி கோபாலர்: அன்னியர் ஆட்சிக்கும் நம்மவர் ஆட்சிக்கும் வேற்றுமை தெரியாமல் மக்கள் இருக்கிறார்கள் என்பதைஉணர்த்துபவராக, **'இன்று நடப்பது நம்மவர் ஆட்சி—இதை மறந்து விடாதீர்'** என்றும் விளக்க முரைக்கிறார். 'இது நம்மவர் ஆட்சி' என்று அமைச்சர் வாயி னல் கூறிவிட்டாலே போதுமென்று தீர்மானித்து விட்டார் போலும்! அன்னியர் ஆட்சிக்கும் நம்மவர் ஆட்சிக்கும் அடக்கு முறை களை அடுக்கடுக்காக உபயோ கிப்பதிலே வேற்றுமை தெரிகிற அளவிற்கு, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலே தெரியாத தின் காரணம் என்ன? 'இது நம்ம வர் ஆட்சி' என்பதற்காகத்தான், ஆங்கிலேயர் பிரயோகிக்க அஞ்சிய அடக்கு முறைகளை (பாதுகாப்புச் சட்டம்) நம்மவர் ஆட்சி வெகு சாதாரணமாகப் பிரயோகிக்கிறது போலும்! 'இது நம்மவர் ஆட்சி' என்பதை ஒரு அமைச்சரே சொல் லித் தெரிந்து கொள்ளுகிற நிலையில் தான், இது, 'பொது மக்களின்' நன்மைக்கான காரியங்களை—ஏதா வது செய்திருந்தால்—செய்கிறது போலும்! 'நம்மவர்' கண்டனத்தை கண்டு இந்த 'நம்மவர் ஆட்சி' ஆத் திரம் கொள்வது ஏன்—? 'நம்ம வர்' கோரும் அத்யாவஸ்யமான ஆரம்பத் தேவைகளைக் கண்டு இந்த 'நம்மவரான' கோபாலர் கோபப் படுவது ஏன்?

"மதுவிலக்கால் சர்க்கார் வரு மானம் குறைந்துவிட்டது — எந்த நல்ல காரியத்திற்கும் பணமில்லை— எனவே வரி கொடுங்கள்" என்று எதற்கெடுத்தாலும், எந்த இடத்தி லும் பாடிவரும் பல்லவியை, கோபாலர், இந்த இடத்திலும் பாட மறந்துவிடவில்லை. மது விலக்கு எந்த அளவிற்கு வெற்றிபெற் றிருக்கிறது, பழக்கமான குடிகா ரர்களிடத்தில் குடி ஒழிப்பால் எந்த அளவு பணம் மிச்சமாகி இருக் கிறது என்பதற்கெல்லாம் சரியான புள்ளி விவரம் கிடையாது. மேலும் இது விவாதத்திற்குரிய விஷயமு மாகும். எனவே, இந்த மதுவிலக் குப் பாட்டை எதற்கெடுத்தாலும் பாடிக்கொண்டு இருப்பது வெறும் கேலிக்கூத்து!

ஆச்சாரியார் மந்திரியாக இருந்த பொழுது பழங்குடி மக்களின் நன் மைக்காக ரூ. 10-லட்சம்தான் செலவிடப்பட்டதாம். இப்பொழுது

கனப கோபாலர் காலத்தில் ரூ. 42-லட்சம் செலவிடப்படுகிறதாம். வீணாகிப்போனப் பணத்தைக் கொண்டு, பழங்குடி மக்களிடம் 'சபாஷ்' பெறப் பார்க்கிறார் நிதி அமைச்சர். அன்று நான் கணை விற்ற பொருளுக்கு இன்று ஒரு ரூபாய் கொடுக்கவேண்டி இருக்கும் நிலையில், பழங்குடி மக்களுக்குச் செய்யப்படும் உதவியின் தரம்—தன்மை எப்படி, அன்று செய்யப்பட்டதைக் காட்டிலும் இன்று அதிகமாகிவிட்டிருக்கும் என்று சிலராவது சிந்தித்துப் பார்த்துச் சிரிப்பார்களே இந்த சிற்ற வாதத்தைக் கேட்டு என்பதை ஏனோ நிதி அமைச்சர் நினைத்துப் பார்க்க மறந்துவிட்டார்? வெறும் விளம்பரமோகம்! அந்தோ பரிதாபம்!

* * *

சென்னை நிதி அமைச்சர், கன்னையர் கலவளர்ச்சிக் கழகம் வெளியிட்ட வேண்டுகோளை ஒரு புகலாகக் கொண்டு, தங்கள் ஆட்சிக்கும் பொது மக்களுக்கும் உள்ள விருப்பத்தகாத உறவுமுறையை ஒளிவு மறைவு இல்லாமல் கூறிவிட்டார். காங்கிரஸ் சர்க்காரிடம், பொது மக்கள் தங்கள் தேவைகளை வெளியிடும பொழுதும், தங்கள் ஆட்சியின் போக்கைக் கண்டிக்கும்பொழுதும்' அவை, சர்க்காரின் உள்ளத்தில் என்னவிதமான உணர்ச்சியைத் தருகிறது என்பதை நிதி அமைச்சர் கோபாலரின் வாய்மூலம் அறிந்துகொள்ளுகிறோம். இதே உணர்ச்சிதான் டெல்லி அமைச்சர்களிடத்திலும் குடிகொண்டு இருக்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

**பாருக்காபாத்** நகராட்சி மன்றம் பண்டித ஜவகருக்கு 9-12-49-ல் ஒரு வரவேற்பு இதழ் வாசித்தளித்திருக்கிறது. அந்த நகர சபையும் ஏதோ கோரிக்கைகளைச் சுட்டிக் காட்டி இருக்கிறது. உடனே பண்டிதருக்குக் கோபம் வந்துவிட்டது. மாகாண மந்திரியான கோபாலருக்கே இவ்வளவு கோபம் வருகிறது என்றால், காங்கிரஸ் மேலிடத்தில் ஒருவரும் உலகப் புகழ் பெற்றிருப்பவருமான பண்டிதருக்கு ஆத்திரம் ஏற்படுவதில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும்.

**"தேவைகளை வெளியிடுவது ஒரு நகர சபையின் கண்ணியத்திற்கும் தன்மானத்திற்கும் எதிரானதாகும். மேல் நாடுகளில் ஒரு நகரசபை தனது சாதனைகளையும் ஆற்றலையும் தான் பெருமையாக எடுத்துக்கூறும்."**

இவ்வாறு எடுத்துக் கூறி, 'தேவைகளை வெளிக்குச் சொல்லாதீர்கள். குறிப்பாக என்போன்றவர்களுக்குத் தொல்லை கொடுக்காதீர்கள்' என்று பிரச்னையை மழுப்பி விட்டிருக்கிறார். அந்த நகருக்கு இதற்குமுன்னர் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தாம் வந்திருப்பதாகவும், அன்று கண்டது போல்தான் இன்றும் அந்த நகரம் இருப்பதாகவும், இந்தப் பன்னிரண்டு ஆண்டில் எந்தவித முன்னேற்றமும் அடையவில்லையென்றும் பண்டிதர் குறிப்பிட்டிருக்கிறார். அத்துடனும் நிற்கவில்லை. இதே போக்கில் தான் இருக்கின்றன இந்தியாவில் உள்ள நகரங்கள் அனைத்தும் என்றும் எடுத்துக் கூறியுள்ளார். நகர முன்னேற்றத்திற்கு சிறிது முயற்சி எடுத்துக் கொள்வதும், பெரும் பெரும் தலைவர்களுக்கு வரவேற்பளிப்பதிலும் தான் இந்த நாட்டின் நகரசபைகளின் பொறுப்பு அடங்கி விடுகிறது என்றும் சுட்டிக் காட்டியுள்ளார். பாருக்காபாத் நகர மன்றத்தின் வரவேற்பை ஏற்க மறுத்திருந்தால், தம் போன்ற மற்றவர்களுக்கு அது ஒரு படிப்பினையாக இருந்திருக்கும். நகரசபையின் வரவேற்பை ஏற்றுக்கொண்டு, அதே நேரத்தில், நகர சபையின் பொறுப்பு வரவேற்பளிப்பதல்ல—வேறு இருக்கிறது என்று உபதேசம் புரிவது பண்டிதர் போன்றாரிடம் நிகழ்வது வேதனைதரக்கூடியதுதான்.

பொதுவாக இந்த நாட்டில் உள்ள நகர சபைகளின் நிர்வாகம் எவ்வளவோ வகைகளில் குறைபாடு உடையதாக இருக்கிறது. அவைகளில் முக்கியமானது, போவோருக்கு பிரிவுபசாரமும் வருவோருக்கு வரவேற்பும் வாசித்துக் கொண்டிருப்பது ஒன்றாகும். மேல்நாட்டு நகராட்சி மன்றங்களோடு இந்த நாட்டு மன்றங்களை ஒப்பவைத்து எண்ணுவது தங்கத்தையும் தாம்பிரத்தையும் ஒத்திட்டுப் பார்ப்பது போன்றதுதான். இந்த நாடு எல்லாத் துறைகளிலும் காலங்கடந்து தலையிட்டு இருக்கிறது என்பதை பண்டிதர் அறியாதவர் அல்ல. மேல் நாட்டில் உள்ளது போன்று இந்த நாட்டு நகர சபைகளுக்கு அதிகாரம் கிடையாது. இச் சூழ்நிலையில் இரண்டு நாட்டையும், இது விஷயத்தில் ஒத்திட்டுப் பேசுவது முழுதும் பொருந்தாது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். அதாவது தேவைகளை, தனி நபர்களோ—கழகங்களோ—கட்சிகளோ—மன்றங்களோ வெளியிடுவது நாடாளவந்துள்ள காங்கிரசாருக்கு எரிச்சலைத் தருகிறது என்பது மட்டும் விளக்கமாகத் தெரிகிறது

பிறர் அளிக்கும் வரவேற்பை அகமகிழ்ச்சியோடு ஏற்கவும், பிறர் வெளியிடும் குறைகளை வெறுக்கவுமான மனவளத்தை காங்கிரசார் இன்று பெற்றுவிட்டு இருக்கிறார்கள் என்பதில் எள்ளத்தனையும் ஐயமில்லை. இந்தப் பண்பாட்டில் பண்டிதரும் சரி மாகாண மந்திரியும் சரி ஒரு தன்மையில்தான் இருக்கிறார்கள்.

* * *

சென்னை சர்க்காரின் உணவு மந்திரி ரோச் விக்டோரியா 8-1 49-ல் வேலூருக்குச் சென்றுள்ளார். நகராட்சி மன்றம் அவருக்கு ஒரு வரவேற்பு கொடுத்திருக்கிறது. அதில் கோரிக்கை ஒன்றும் கிடையாது. தேவை எதுவும் வேலூருக்குக் கிடையாது என்று இதனால் பொருள்படாது. பயன்தராத பணியில் ஏன் ஈடுபட வேண்டும் என்று இருந்துவிட்டார் போல் இருக்கிறது அந்த நகர சபை!

அது சமயம் மந்திரியாரின் முகத்தில் மகிழ்ச்சி கூத்தாடிக் கொண்டுதான் இருந்திருக்கும்! வேலூர் நகரசபையாவது வேதனை நிகண்டு படிக்காமல் விட்டுவிட்டதே என்று நினைக்கும்பொழுது, பூரிப்படையாமல் எப்படி இருந்திருக்க முடியும் உணவு மந்திரியால்? அது சமயத்தில் அவருக்கு ஏற்பட்ட உற்சாகத்தை அவர் அங்கு பேசிய வார்த்தைகளே எடுத்துக் காட்டுகின்றன'

**"எந்தவிதமான பிரத்தியேகமான தேவைகளையும் வெளியிடவில்லை இது, நகரசபை நிர்வாகம் ஒழுங்காக நடைபெறுகிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது."**

இவ்வாறு புகழுரை கூறி வேலூர் நகர சபைக்கு நற்சா

சிப் பத்திரம் தந்திருக்கிறார் உணவு மந்திரி.

தேவையைத் தெரிவித்தால் சிற்றம் பிறக்கிறது. எது எதையோ எடுத்து வீசுகிறார்கள் பொது மக்கள்மீது அமைச்சர்கள். வாய் மூடி இருந்தால், ஒருவருக்கும் ஒரு குறைபாடும் கிடையாது என்று சித்தரிக்கிறார்கள். பேசினால் பகை-பழி! மௌனம் சாதித்தால்! திருப்தியான நிலை என்ற நற்சாட்சி:

இந்த உணர்ச்சி ஆளவந்தார்களுக்கு இருப்பது கூடாது. ஆபத்தானது—நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லக்கூடியது. ஆளவந்தார்களுக்கும் பொது மக்களுக்கும் இருந்துவந்த நல்லுறவு நாசமாகிக்கொண்டு வருகிறது எனவேதான், பொதுமக்களைப் பழிக்கும் துணிவு ஆளவந்தார்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது. பதவிநோயின் ஒரு கூறு இது. இவர்களைப் பதவி நோய் விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருக்கிற காரணத்தால்தான், சம்மந்தா சம்மந்தமில்லாமல் பதவியைக் காப்பாற்றிக்கொண்டால் போதுமென்ற முடிவான நோக்கத்தில், இவ்வாறு எல்லாம் வேலைக் கொடு விதமாக, இடத்துக்கு இடம் மாற்றமாகப் பேசி வருகிறார்கள் பரிதாபத்துக்குரிய இந்தப்பதவி யோகிகள்!

---

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பு முழுதும் அக் குடும்பத்தில் பிறந்த அனைவர்மீதும் சரிசமமாக சுமத்தப்படுமானால் ஒவ்வொரு தனி நபரும் முழு வளர்ச்சியடைய வழி பிறக்கும். ஒவ்வொருவரும் முழு மனிதத் தன்மையை அடைய வேண்டுமானால் இந்தக் கூட்டுக் குடும்ப அமைப்பை அடியோடு தகர்த்தெறிய வேண்டும்.

செல்லா இடத்தில் சினம் காட்ட முடியாத காரணத்தால், செல்லிடத்தில், அவர்கள் எந்த விதத் தீங்கும் புரியாமல் இருந்தாலுங்கூட, வலிய அவர்களிடம் வம்புக்கு நிற்பதை நாம் ஒவ்வொரு குடும்பத்திலும்—ஏன்—ஒவ்வொருவரிடத்திலும் பார்க்கிறோம். இதுவும், இந்தக் கூட்டுக் குடும்பத்திலிருந்து பிறந்து நம் ஒவ்வொருவரையும் வந்தடைந்து நம்மைப்பற்றிக் கொண்டுள்ள நோய்தான். நமது பின் சந்ததிகளையாவது இந்த நோய் பீடிக்காமல் இருக்க வேண்டுமானால், இதற்கான ஏற்பாட்டோடு கொண்டு வரப்பட்டுள்ள இந்த மசோதா உடனடியாக சட்டமாக்கப்படவேண்டும்.

பெண்களுக்குச் சொத்துரிமையும், திருமண விலக்குரிமையும் வழங்குவதின்மூலம் ஆண் பெண் உறவிலுள்ள ஆண்டான் அடிமை நிலைமாறும் ஆண் பெண் ஒவ்வொருவர் இடத்திலும் சமத்துவ உணர்ச்சி உருவாகும். இந்த பலனைக் கொடுக்க நீண்ட காலம் செல்லும் என்பது உண்மைதான். இதனை அமுல் நடத்துவதில் துவக்கத்தில் சில சங்கடங்கள் ஏற்படுவது இயற்கையேயாகும், இதற்காக என்று இம்மசோதாவை சட்டமாக்குவதைத் தள்ளிப் போடுவது கூடாது என்பதே நமது வேண்டுகோள்.

இந்து சமுதாய சீர்திருத்தம் செய்யப்போகிறோம் என்று நாம் தேர்தலுக்கு முன்னர் கூறினதில்லை; எனவே நாம் இச் சட்டம் செய்வதற்கு பொது மக்களிடம் அதிகாரம் பெற்றிருக்கவில்லை என்று, மக்களாட்சி கோட்பாட்டை முன் தள்ளி, இம் மசோதாவைத் தொலைக்க வாதிடும் பார்க்கிறார் டாக்டர் பட்டாபி. புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கும் பொது மக்களின் சம்மதத்தை பெற்றாக வேண்டும் என்ற புத்தியைப் பெறாத இந்த காங்கிரஸ் தலைவர், இம்மசோதாவிற்கு மட்டும் பொது மக்கள் கருத்தைக் கேட்டாகவேண்டுமென்று பேசப் புறப்பட்டிருப்பது கேலிக்கூத்தேயாகும்.

தோழர் கே. டி. ஷா குறிப்பிட்டுள்ளதுபோல், இம் மசோதாவின் சில சில விதிகள் நூற்றுக்கு ஒருவராக உள்ள பொருள் படைத்தவர்களுக்குத்தான் சாதக பாதகத்தைக் கொடுக்கும் என்று சொல்லியிருப்பது கவனிக்கத் தக்கது. பொருள் படைத்தவர்கள் விஷயமாக இருந்தாலும், இம்மசோதா சட்டமாக்கப்படுமானால், பொதுவாக எல்லா மக்கள் உள்ளத்திலும் ஒரு புதிய நிலையை உண்டாக்கும் என்பதை மறந்துவிடக் கூடாது. இப் புது நிலை இந்து மதத்தைச் சேர்ந்தவர்களோடு மட்டும் கட்டுப்பட்டுவிடக் கூடிய தன்மை. இத்துணைக் கண்டத்திலுள்ள பிற்போக்கு சக்திக்குக் கல்லறை கட்டவும், புதிய சமுதாய ஏற்பாட்டிற்கு வித்திடவுமான ஒரு சூழ்நிலை இம்மசோதா சட்டமாக்கப்படுவதால் இங்கு ஏற்பட்டே தீரும்.

தோழர் சந்தானம் கூறியிருப்பது போல், அரசியலில் கி. பி, 1950 லும், சட்டதிட்டங்களில் கி. பி. 1950-லும் இந்நாட்டு மக்கள் இருந்து வருவது கூடாது என்பதை நாம் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். இந்தக் காலத்தினால், கி. பி. 1950 ஆண்டு கருத்தைக் கட்டியழுபவர்கள் டாக்டர் பட்டாபியாக இருந்தாலும், சட்ட நிபுணர் என்று சொல்லப்படும் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யராக இருந்தாலும், உதறித்தள்ள முன்வர வேண்டும் சட்டசபை உறுப்பினர்கள். இம்மசோதாவை சட்டமாக்கும் பொறுப்பேற்றிருக்கும் டாக்டர் அம்பேத்காரை நாம் மனமாரப் போற்றுகிறோம்.

★ போர்வாள் ★

திருவள்ளுவர் ஆண்டு 1980 மார்கழி 3
17—12—49 சனிக்கிழமை

# கி. மு. 1950 — கி. பி. 1950!

இந்துமதம் என்ற ஒருசொல்லுக்கு, மற்ற மதங்களைக் குறிப்பிடும் சொற்களுக்கு இருப்பது போன்ற ஏதாவது ஒரு குறிப்பிட்ட பொருள் உண்டா என்றால், இல்லை என்று தான் கூற வேண்டும். ஒவ்வொரு வாழ்க்கைத் துறையிலும் இன்னின்ன நடவடிக்கைகளைக் கொண்டதாக இருப்பது தான் இந்து மதம் என்று எவராலும் வரையறுத்துக் கூறக்கூடியதன்று. அறுபதினாயிரம் மனைவியை மணந்து கொண்ட மாமிச பிண்டமும் இந்து தர்மத்தைக் கடைப்பிடித்தொழுகும் தர்மசொரூபிதான். ஏகபத்தினியோடு இருந்து வந்ததாகக் கூறப்படும் ஆரிய ராமனும் இந்து தர்மப் பாதுகாவலன் தான். இருவர் போக்கிலும் முரண்பாட்டினைப் பொருட்படுத்தாது, இருவரையும்போற்றிப் புகழ்ந்து எழுதப்படும் நூற்கள்பல. ஐவரை மணங்கொண்ட அம்மணியும் இந்துதர்மத்திற்கு எடுத்துக் காட்டுத்தான். தேவேந்திரனோடு சோரம்போன ஆரிய முனிவரின் மனைவி அகலிகையும், மற்றவர் வணக்கத்திற்கு உரியவள் தான். பெற்ற தாயைக் கொல்வதும் இந்து தர்மந்தான். தந்தையைப் பகைத்துக் கொள்வதும் அதே தர்மந்தான். ஊர் பெண்கள் மீது காமக்களியாட்டில் மூழ்கிய முரளி தானும் தர்மம் கெட்டு அதர்மம் தலையெடுத்த நேரத்தில், தர்மத்தைக் காப்பாற்ற வந்த கண்கண்ட கடவுள் தான்.

பெண்ணினத்தை பேசிபேயெனப்பேசும் மாந்தர் குலத்தில், பிறப்பிலே உயர்வு தாழ்வு உண்டு என்று பிதற்றும்; உலகத்தை மாயை என்று உளறும்; பிறரை உறிஞ்சி வாழ சிலருக்கு வழிவகை செய்யும்; 'காமம் களவாடல், கள்ளுண்டல், பொய்மொழிதல், ஈதல், மறுத்தல், இவ்வளவும் இந்து தர்மத்தின் அடிப்படை அவலட்சணங்கள்.

மிக மிகத் தந்திர சாலிகளான ஒரு சிறு குழுவினர், தாங்களும் தங்கள் பரம்பரையினரும் என்றென்றும் உடல் களைக்கஉழைக்காமல் இருப்பதற்காகவும், மற்றவர்கள் உழைப்பில் உல்லாச வாழ்வு வாழ்தற்காகவும் ஏற்படுத்திக் கொண்ட ஒரு கொடுமையான ஏற்பாடுதான்-இந்து மதம் —இந்து சமதர்மம்—சனாதனம் —வருணாஸ்ரம தர்மம். காட்டுமிராண்டி காலத்தில், சிந்திக்கும் பண்பு சிறப்படையாத நேரத்தில், சில மனித சமுகப் புல்லுருவிகள், செம்மையாக செப்பனிட்டுக்கொண்ட பொருளாதார சுரண்டல் சாதனம்தான் இந்த இந்து தர்மம். தாங்களும் மக்கள் இனத்தவர்கள் தான் என்ற இன்றியமையாது ஒவ்வொருவரிடமும் இயல்பாகத் தோன்றவேண்டிய ஒரு சிறந்த எண்ணத்தைக்கூட, தேவையான அளவிற்கு எல்லா மக்களிடத்திலும் கருக்கொள்ள விடாமல் பார்த்துக்கொள்ளும் வலிமை கொண்டு விளங்குவது இந்த வருணாஸ்ரம சனியன். இந்த நாளிலும் இந்தப் பீடை பிடித்த தர்மத்திற்கு வலிவு இருக்கிறது என்றால், அந்தக் காலத்தில் இந்தச் சதித்திட்டம் மக்களை என்னபாடு படுத்தி இருக்காது.

மனிதனுக்கு மனிதன் வேற்றுமைபட்டுக் கிடக்க வித்திடுவதும், என்றென்றும் வேற்றுமை வளர்ந்துவர பார்த்துக் கொள்வதுந்தான் இந்த தர்மத்திற்குள்ள ஒரே குறிக்கோள். இத்துணைக் கண்டத்தின் வரலாறு இந்தக் கோணல் எழுதுகோலால்தான் எழுதப்பட்டிருக்கிறது என்பதை எவராலும் மறுக்க முடியாது.

இத்துணைக் கண்டத்தின் மீது ஏற்பட்டபடையெடுப்புகளுக்கெல்லாம், இந்த அதர்மக் கோட்பாடுதான் அருந்துணையாக இருந்து வந்திருக்கிறது. ஆங்கிலேயர் ஆட்சி இங்கு புகுந்ததும், பின்னர் நிலைத்ததும், இருநூறு ஆண்டுகள் எழிலோடு வாழ்ந்து வந்ததும், இந்த ஈடு எடுப்பற்ற அக்கிரம தத்துவத்தின் விளைவினால்தான். ஆங்கிலக் கலை இங்கு இறக்குமதி செய்த பிறநாடுகளின் விடுதலை வீர வரலாறுகளால் தான், இத்துணைக் கண்டத்தில் விடுதலை இயக்கம் வளர ஏதுவாயிற்று. இந்த உண்மையை மறப்பது வரலாற்று உண்மையை மறுப்பதாகும். ஆங்கில ஏகாதிபத்தியமும் மனிதனை மனிதனாக மதித்து நடக்கும் உயர்ந்த கலைஞானத்தை இங்கு புகுத்தத் தம்மிச்சையாக விருப்பம்கொள்ளவில்லை. வேண்டா வெறுப்பாகத்தான் இத் துறையில் ஏகாதிபத்தியம் பணி புரிந்து வந்தது. இருந்தாலும் காலம், உயர்ந்த கோட்பாடுகள் இங்கு பரவுவதைத் துரிதப்படுத்தியது. இதன் பலனாக சிறுகச் சிறுக சனாதனம் — இந்து தர்மம் சரியத் தொடங்கியது

இன்று ஏட்டளவிலும், சிலபலரின் உள்ளத்திலும்தான் அந்த சனாதனப் பண்பாடு குடிகொண்டு இருக்கிறதேயன்றி, அது தன் முழுத்தன்மையோடு நாட்டில் உலாவ சக்தி பெற்றிருக்கவில்லை. காலத்தால் தோன்றியுள்ள புதிய சக்திகள், அதற்கு, தினம் தினம் சம்மட்டியடி கொடுத்த வண்ணம் இருக்கின்றன. அடி பொறுக்க முடியாமல், தனது அங்கம் ஒவ்வொன்றாகச் சிதைந்து விழுவதைக் கண்டு, சனாதனம் கூக்குரல் கிளப்புகிறது. அந்தக் கூக்குரலின் ஒரு பகுதி சென்ற மூன்று நான்கு நாட்களாக டெல்லி சட்ட சபையிலிருந்து கிளம்பிக்கொண்டு இருக்கிறது.

இந்து தொகுப்புச் சட்டம் என்ற ஒரு மசோதா டெல்லி சட்ட சபையில் விவாதிக்கப் பட்டு வருகிறது. மசோதாவில், **பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கல், விவாக ரத்து உரிமை வழங்கல், பலதார மணத்தை ஒழித்தல்,** போன்ற கோட்பாடுகள் சேர்க்கப் பட்டிருக்கின்றன. இந்த மூன்று பிரச்னைகளும், வெவ்வேறாகப் பிரிக்க முடியாது, ஒன்றையொன்று பற்றிக் கொண்டு இருப்பனவாகும். பெண்களுக்குச் சொத்துரிமையளிக்கப்படாமல், திருமண நீக்க உரிமை அளிப்பதால் மட்டும் பெண்களின் வாழ்க்கை நலமெய்திவிடாது. அதே போல் திருமண நீக்க உரிமை தராமல் பல பெண்களை மணப்பதை மட்டும் தடுத்து விடுவதாலும் பெண்களின் நிலை சிறப்பெய்திவிடாது.

இது கண்டு இந்து தர்மம், அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் உருவில் உறுமுகிறது. சர் சூத்திர தர்மம் தோழர் ஓ. வி. அழகேசன் நாவில் நர்த்தனம் புரிகிறது. எல்லாவற்றிலும் விசித்திரமானது, வேதனைத் தரக்கூடியது. காங்கிரஸ் ஆளவந்தார்களால் கொண்டு வரப்பட்டுள்ள ஒரு மசோதாவை, காங்கிரஸ் உறுப்பினரே, அதுவும் அனைத்து இந்திய காங்கிரஸ் தலைவர் பட்டாபி சீதாராமையாவே எதிர்த்துப் போரிடுவது. நாம் இது கண்டு ஆச்சரியப்படவில்லை. ஏனெனில், காங்கிரஸ் நிறுவனம் ஒரு கதம்பம் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். காங்கிரஸ் நிறுவனத்துக்குள்ளாகவே முற்போக்கு சக்திக்கும் குழப்பம் ஏற்பட்டு நீண்ட நாள் ஆகிறது என்பதை நாம் அறிவோம். அதன் ஒரு கூறுதான் இது. இந்து தொகுப்பு மசோதாவில் அக்குழப்பம் சற்று விளக்கமாகத் தெரிகிறது: அவ்வளவுதான்.

இந்து தர்மத்தில் உள்ள கூட்டுக் குடும்பமுறை சீர்குலைந்து போய் நீண்ட காலம் ஆகிறது. அதனை இனி எந்த வகையிலும் சீர் செய்ய முடியாது. உழவுத் தொழில் தவிர்த்து வேறு தொழில் நன்கு உருவாகாத நேரத்தில் வேண்டுமானால் கூட்டுக் குடும்ப ஏற்பாட்டிற்கு ஒரு அவசியமும், நிலைத்து நிற்பதற்கான ஒரு வாய்ப்பும் இருந்திருக்கலாம். ஆனால் பொருள் ஈட்டுவதற்கான துறைகள் பெருகிவிட்டப்பிறகு, கூட்டுக் குடும்ப முறை நிலைத்திருக்குமென்று நம்புவதும், சீர்குலைவைத் தடுக்க முயற்சிப்பதும் காலவேகத்தின் கருத்தறியாதார் செயயும் காரியமேயாகும்.

கூட்டுக்குடும்ப ஏற்பாடே அதிகாரம் பரவலைத் தடுத்து, குடும்பத் தலைவனிடமே எல்லா அதிகாரமும், இருக்கப் பார்த்துக் கொள்ளச் செய்த தந்திர ஏற்பாடாகும். குடும்பத்தில் மூத்தவன் மரமண்டையாக இருந்தாலும், அவன் சொற்படி, குடும்பத்திலுள்ள அறிவிற் சிறந்த இளையவன் ஆடவேண்டும் என்பதற்காகவே முன்னெச்சரிக்கையோடு தந்திரக்காரர்கள் செய்து வைத்த சதி முறையாகும். இதனால் மூத்தவனை, சுரண்டல் பேர்வழிகள் தங்கள் வலைக்குள் சிக்கவைத்து என்றென்றும் வாழ வகைசெய்து கொள்வது இலகுவாயிற்று. இளையவனும்; இளமையில் ஏற்பட்டத் தாழ்வுணர்ச்சியால், மூத்தவன் போக்கை எதிர்க்கவோ, அன்புரைகூறி மாற்றவோ, இயலாதவனாக இருக்க வேண்டும். இந்த முறை அன்பால் அமைந்த கூட்டுறவல்ல. ஆண்டான் — அடிமை என்ற உறவால் ஏற்பட்ட, பிற்போக்குத் தன்மைகொண்ட ஒரு முறையாகும். புதிய கருத்துகள் புகவிடாது, பழமையை அழியாமல் காப்பாற்றுவதற்காக ஏற்பாடு செய்துவைத்த சனாதன விலங்கு இது.

மூத்தவனாகப் பிறந்துவிட்ட ஒரு காரணத்துக்காகவே, அவன் அதிகப் பொறுப்பேற்கவும், இளையவர்களுக்கு பொறுப்புக் குறைவுமான ஒரு கோளாறும் இந்தக் கூட்டுக் குடும்ப முறையினால் ஏற்படுவதுதான். ஒரு குடும்பத்தின்

(5-ம் பக்கம் பார்க்க)

## அண்ணாவின் நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| அண்ணாவின் அறிவுரைகள் | 0 | 3 | 0 |
| என்னைக் கவர்ந்த புத்தகங்கள் | 0 | 1 | 6 |
| தமிழரின் மறுமலர்ச்சி | 0 | 8 | 0 |
| **அண்ணாவின் இருவர்ண படத்துடன்** | | | |
| பொங்கல் வாழ்த்து | 0 | 1 | 0 |
| விடியுமா? | 1 | 0 | 0 |
| ஒப்பாரி | 0 | 8 | 0 |

விற்பனைக் கழிவு 25% அனுப்பும் செலவு இனாம்.

**எம். சூரி,**
14, ஏ குப்பையர் தெரு,
சென்னை 1.

# பத்து, பதினைந்தான விந்தை!

"எங்களிடம் ஏன் கோபம் பிரிய நேசர்களே! இன்னும் பத்தாண்டு காலத்திற்கு உங்கள் ஜோலிக்கே நாங்கள் வரமாட்டோமே, நீங்கள் எந்தவிதமாக ஏழைகளை எவ்வளவு கொடுமைப்படுத்தினாலும் உங்களிடமிருக்கும் தொழில்களை 10 ஆண்டுகள் வரை நாட்டுப் பொதுச் சொத்தாக்குவது என்ற திட்டம் இருக்கும் திக்கு நோக்கிக்கூட நாங்கள் திரும்ப மாட்டோமே; நாங்கள்தான் 10 ஆண்டு கால அடிமை முறிச்சீட்டு எழுதிக் கொடுத்துவிட்டோமே! இன்னமுமா எங்கள் மீது கோபம், டாடாவே, பிர்லாவே, டால்மியாவே, கோயங்காவே!" என்று, தேசியத் தலைவர்கள், அடிக்கடி, முதலாளித்வ முத்தண்ணாக்களிடம் குழைவு மொழிகள் பலவற்றைப் பரிமாறிக்கொண்டிருப்பதை, தேசிய ஏடுகள் மூலமாகவே நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம் அல்லவா, இப்போது, அந்தப் பத்து, பதினைந்து ஆகிறது! பத்து ஆண்டுக் காலத்திற்குத் தேசிய மயமாக்குவதில்லை தொழில்களை என்ற பேச்சு மறைந்து 15 ஆண்டு என்ற புது கெடுவு பிறந்திருக்கிறது! அண்ணல் நேருவின் அருமைத் தமக்கையார் அம்மை விஜயலட்சுமி இந்தக் கிழமை, அமெரிக்காவிலே, இன்னும் 15 ஆண்டுக் காலத்திற்கு இந்தியாவில் எந்தத் தொழிலையும் தேசிய மயமாக்கும் பிரசினையே எழமுடியாது என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறார்! முதலாளித்வ மமதையாளர்களிடம் இந்த ஆளவந்த அருங்குணக் குன்றுகள் 10 ஆண்டுக் காலத்திற்குத்தான் சரணாகதி அடைந்திருப்பர் — பிறகாவது, கொஞ்சம் ரோஷத்துடன் நடந்துகொள்வர் என்று நாம் இதுவரை எண்ணியிருந்தோம். "இல்லை இல்லை —15 ஆண்டுக்காலம் எங்கள் 'சாஷ்டாங்க நமஸ்காரம்' நீடித்து நிற்கும்" என்று தெரிவித்து விட்டார் தோழியர் விஜயலட்சுமியார்! நன்று, நன்று, அம்மையே, பதினைந்தாண்டுகள் என்ன, 1[illegible]0 ஆண்டுகள் வேண்டுமானாலும் பிர்லா தேவதைகளின் திருவடி தொழுதிடும் பக்தர்களாக இருங்கள்—கவலையில்லை—ஆனால் அந்தப் பதினைந்தாண்டு காலம் வரையிலும், ஆட்சிப்பீடம், உங்களிடம்தான் இருக்கும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறீர்களே, அந்த எண்ணத்தை மட்டும் விட்டுவிடுங்கள். மக்கள் அவ்வளவு காலத்துக்கு நிச்சயமாக ஏமாளிகளாக இருக்க மாட்டார்கள்!


## திராவிடநாட்குறிப்பு

திராவிடமுன்னேற்றக் கழக முழு விவரங்களும், புகைப்படங்களும், அண்ணாவின் பொன்மொழிகளும் தபால் தந்தி, வருமான வரி ரிஜிஸ்ட்ரேஷன் கட்டண விவரங்களும், அடங்கியது.

திராவிடரனைவரும் பெற்றிருக்க வேண்டிய

**சிறந்த டைரி**

**500 பக்கம்** **விலை அணா 12**

சாதாரண தபாலில் அனுப்ப 0—14—0 பதிவுத் தபாலில் அனுப்ப 1—2—0

விற்பனையாளர்க்குக் கழிவு 20% செலவு வேறு.

சொற்ப பிரதிகளே உள்ளன, முந்திக்கொள்ளுங்கள்.

**போர்வாள் அலுவலகம்** பவழக்காரத் தெரு சென்னை 1.

# இந்தி(ய)க் குடியரசு!

"சிர்த்தொண்டன்"

"சத்தியமேவ ஜயதே"

"பாரத்"

"வந்தே மாதரம்"

"ராஷ்டிரீய ஜண்டாக்கி ஜே"

"பாரத் மாதாக்கி ஜே"

"ஜெய் பாரத்"

மேலே கூறப்பட்ட வாசகங்கள் ஒலிக்க சுதந்தர இந்தியா குடியரசாக மாறப் போகின்றது 26-1-1950 ம் தேதி. இந்தியா ஆங்கிலேயர் ஆட்சியினின்றும் விடுபட்டு 15-8-47 ல் சுதந்திரம் பெற்ற பொழுது "ஜெய்ஹிந்த்" "வந்தேமாதரம்" "மகாத்மா காந்திக்கு ஜே" என்ற கோஷங்கள் கேட்டன. இந்தியா குடியரசாக மாறிய பின்னர் "ஜெய்ஹிந்த்" என்ற கோஷம் அதன் கர்த்தா நேதாஜி சுபாஷ் போஸ் அடைந்த கதியை தானும் அடைவது நிச்சயம். "ஜெய்ஹிந்த்" மறைந்து "ஜெய் பாரத்" உருவெடுக்கப்போகின்றது. இந்தியா குடியரசாக மாறுவதின் நினைவாக அரசாங்கம் வெளியிடப் போகும் தபால் தலைகளை சமீபத்தில் பத்திரிகைகளில் பார்த்தவருக்கு இதன் உண்மை விளங்கும். இந்த தபால் தலைகளில் "பாரத்" என்றுதான் இந்தி மொழியில் எழுதப்பட்டிருக்கின்றது. "இந்தியா" என்று எழுதப்படவில்லை. இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் வட நாட்டினர் போக்கையும் மத்திய அரசாங்கத்தினர் போக்கையும் பத்திரிகை வாயிலாக அறிந்தவர்களுக்கு இதனை எதிர்பாராத ஒன்றாக எண்ண இடமில்லை. அரசியல் அமைப்பு சபை அங்கத்தினர்களில் சிலர் "இந்தியா" என்ற பெயரையே "பாரத்" என மாற்ற வேண்டும் என்று முயற்சித்ததை இங்கு ஞாபகப் படுத்திக் கொள்ளவேண்டும். ஆதலின் தபால் தலைகளில் "பாரத்" என குறிப்பிட்டிருப்பதைப்பற்றி நாம் வியப்புற வேண்டியதில்லை இதன் விளைவு "ஜெய் பாரத்" என்றுதானே ஆகும். இதில் சந்தேகத்திற்கு இடமேயில்லை.

இந்தியா குடியரசாக மாறிய பின்னர் அரசியல், பொருளாதாரம், சமூகம் முதலிய துறைகளில் என்னென்ன மாறுதல்கள் ஏற்படும் என்பதனை இப்பொழுது வரையறுத்துக் கூற முடியாது. ஆனால், மொழித் துறையில் இந்தியா "இந்தியக் குடியரசாக" அல்ல, இந்திக்குடியரசாகத்தான் திகழப் போகின்றதென்பதனை அறுதியிட்டுக்கூறலாம். இந்தியோ தேசிய மொழியாக நாட்டிலே திணிக்கப்பட்டுவிட்டது அதிகார பூர்வத்துடன். இந்தியாவில் மொழிஏகாதிபத்தியத்திற்கு வித்திட்டாய் விட்டது இந்தியை தேசிய மொழியாக ஆக்கியதின் மூலம். இப்பொழுதே "சர்வம் இந்திமயம்' என்ற நிலையை நாட்டிலே காண்கின்றோம். இந்தி மொழியைப் பரப்புவதற்குப்புதுப்புது ஸ்தாபனங்கள் தோன்றிய வண்ணம் இருக்கின்றன. அரசாங்க முத்திரைகளில் இந்தி. இனி வரப்போகும் ரூபாய் நோட்டுகளிலும் நாணயங்களிலும் இந்தி. பிரிட்டிஷ் ஆட்சியிலாவது ரூபாய் நோட்டுகளிலும் நாணயங்களிலும் தமிழ் மொழியில் அவற்றின் மதிப்பு குறிக்கப் பட்டிருந்தது. ஆனால் இந்தியக் குடியரசின் நோட்டுகளிலும் நாணயங்களிலும் தமிழுக்கு இடம் உண்டா என்ற கேள்வி பிறக்கின்றது. இருக்கலாம் என்று சொல்ல மனம் துணியவில்லை. ஆட்சியாரின் இந்தி ஏகாதிபத்தியத்தை நோக்குங்கால், இருக்காது என்றே தைரியமாகச் சொல்லலாம். இந்தி ஏகாதிபத்தியம் நாட்டில் நிலவத் தான் போகின்றது. மற்ற மொழிகள் "அடிமை வாழ்வு" வாழப்போவது நிச்சயம். இதனை உணரா விட்டால் நாம் நம்மையே ஏமாற்றிக் கொண்டவர்களாவோம்.

இந்த நிலையிலே திராவிடநாட்டில் தமிழ் மொழியின் கதி என்ன? நம்முடையதாய்மொழிப்பற்றையும் வட இந்தியாவில் காணப்படும் தாய் மொழிப் பற்றையும் சற்று ஒப்பிட்டுப்பாருங்கள்.

அங்கே "பாபு" என்கின்றான்

இங்கே ரிக்ஷா வண்டியோட்டுபவன்கூட "சார்" என்கிறான்.

அங்கே "நமஸ்தே"

இங்கே "குட்மார்னிங்,"

"நமஸ்காரம்," "நமஸ்தே"

அங்கே, "புரானா டில்லிக்கு ஜானேக்கு கித்னா ருப்யா. பூந்தா" என்றால், வண்டிக்காரன், "தோ ருப்யா பாபுஜீ" என்கிறான்.

இங்கே "சைதாப் பேட்டைக்கு என்னப்பா கேட்கிறே" என்றால் "ரொம்ப இல்லை சார், ரூபீஸ் (two rupees) கொடுங்கோ" என்கிறான் வண்டிக்காரன்.

அங்கே "பாபுஜீ கல் சட்டி ஹியா?" (ஐயா, நாளைக்கு விடுமுறையா?)

இங்கே, என்ன சார் நாளைக்கு லீவா (leave) என்கிறான் பாமர முனியன் கூட.

அங்கே "where to wait for the bus" என்று இந்தி தெரியாதவன் கேட்டால் "உதர் ஜாவ்" என்று பதிலளிக்கிறான் ஆங்கிலம் தெரிந்தவன்.

இங்கே "எங்க சார் பஸ்

...க்கு நிக்கணும்" என்றால் "There is the bus stand opposite fruit market" என்ற பதில்.

அந்தோ, மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் அல்லவோ இருக்கிறது வட இந்திய மொழிப்பற்றுக்கும் நமது மொழிப்பற்றுக்கும்! என்ன வெட்கக்கேடான நிலைமை. இதே நிலை நீடித்தால் இந்தி ஏகாதிபத்தியம் நாட்டிலே நிலவும் பொழுது தமிழ் மொழியின் கதி என்ன ஆவது? சிந்திக்கவும் பயமுண்டாகிறது. தமிழின் எதிர்காலத்திற்கு ஆபத்து என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. நிலைமை எப்படி இருக்கும் என்பதனை மிக சுலபமாக ஊகித்து விடலாம்.

"நமஸ்தே" நிலை பெற்று விடும்.

"வாடர்" (water) கொண்டா என்பது "பானி கொண்டா" என்று மாறிவிடும்.

"ஆம்" என்பது "ஜி ஆ" என்றுதான் ஆகிவிடும்.

"சோறு போடு" "கானா போடு" என்றாகும்.

இவ்விதம் உதாரணங்கள் பெருக்கிக் கொண்டே போகலாம். முடிவு என்ன ஆகும்? தமிழ் மொழியிலே இந்திமொழி கலப்பு பரிபூரணமாக இருக்கும். தமிழ் தனது தன்மையை இழந்து விடும். வடமொழியால் சிதைக்கப் பட்டிருக்கும் தமிழ் உயிருடன் வதைக்கப்படும் இந்தி மொழியால்! தமிழ்மொழி நசுக்கப் பட்டால் தமிழனது கலாச்சாரமும் நாகரிகமும் தானாகவே நலிவடையும். ஆதலின் நாம் என்றும் தாழ்வுற்று கிடக்கவேண்டியது தான் நமது பண்டைப்பெருமையை பேசிய அளவில்

எனவே ஆணையிட்டுச் சொல்லலாம் 26-1-50ல் தோன்றப்போவது இந்திக் குடியரசே யொழிய இந்தியக் குடியரசல்ல. இதனை நன்குணர வேண்டும் திராவிட நாட்டாராகிய நாம். இதுவரை ஆங்கில ஏகாதிபத்தியம் நம்மை ஆட்டிப் படைத்தது. இனி இந்தி ஏகாதிபத்யத்தைக் காணப்போகிறோம் இருபதாம் நூற்றாண்டுபிற்பகுதியிலிருந்து!

---

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

கடவுளாய்ப் பிறந்தாலும் கூட கொடுத்து வைத்திருக்க வேண்டும் போலிருக்கிறது! எல்லாக் கடவுளுக்குமா அப்படி ராஜோபசாரம் நடந்து வருகிறது!

"என்ன இருந்தாலும் நம்ப கணபதி குருக்கள் சிங்காரிப்பே சிங்காரிப்புத்தான்! பார்க்கப் பதினாயிரம் கண்கள் வேணும்! அப்பனே! முருகா"......என்று படபடவென்று கன்னத்தில் போட்டுக் கொண்டார் ஒரு பக்தர்.

பக்கத்திலிருந்த ஒருவர் "அதை விட்டுத்தள்ளுங்கள் சார்! அம்மனைப் பாருங்கள்! அடாடா! என்ன காந்தி! என்ன பிரகாசம்! கிளி கொஞ்சுகிறது! என்ன அழகு... என்ன அழகு!......என்று பல்லவி பாடினார்!

"நம்ப நடேச செட்டியார் உபயம்னு கேட்க வேணுமா வைபவத்தை! மனுஷன் சந்தசாமின்னு உயிரையே விடுகிறாரே! பணம், கோடி இருந்தாலும் குணம் வேண்டாமா? தண்ணியாட்டம் வாரி இறைக்கிறாரே பணத்தை சாமிக்காக! இன்னைய செலவு மட்டும் இரண்டாயிரமாவது இருக்கும்! சாமி ஜோடனைக்குப் பூ அலங்காரம் ஒன்றே போதுமே!"

"காசு இருந்தாலும் மனம் வரவேணுமே! கொடை 'வள்ளல்'ன்னு நம்ப நடேச செட்டியார் தான். இன்னைக்கு அபிஷேகத்திற்கு மட்டும் ஆயிரம் ரூபாய் புடிச்சிதாமே கோயிலிலே! குருக்களய்யாக்களுக்கெல்லாம் பட்டு வினியோகமாமே! அடடா என்ன தங்கமான மனது!"...ஜனங்கள்—பொது ஜனங்கள் என்று சொல்லிக்கொள்ளப் படுபவர்கள்— செட்டியார்மீது சரமாரியாகப் பொழிந்த சர்டிபிகேட்கள் இவை! அடியார்களின் ஆனந்தக் கூற்றுகள்!!

இதன் நடுவே......"ஐயா! சாமி! காலணா அரையணா இருந்தால் தர்மம் போடுங்க சாமி! இரண்டு நாளா பட்டினிங்க! ரொம்ப புண்ணியமாப் போகும்! உங்க குழந்தை குட்டி நல்லா இருக்கட்டும் சாமி! பசி காதை அடைக்குதுங்க ஐயா!"

பரந்தாமனின் கோலாகல வைபவத்தை—பவனியைப் பார்த்து பக்தர்கள் புளகாங்கிதம் அடையும் நேரத்தில்—பைசாசம் போன்று பிச்சைக்காரப் பையன் குரல் வேறு! இரும்புக்கடை நடேச செட்டியாரின்—தயாளகுண சீலனின்—'கொடைவள்ளலி'ன் —மாஜி வேலைக்காரப் பையன் பழனி, நோயினால் உருக்குலைந்து வாடும் தன் தாயைப்பிடித்துக் கொண்டு பிச்சை கேட்டுக்கொண்டே வந்தான் அந்த ஊர்வலத்திலே!

"சீ...பிச்சைக்கார கழுதே! இதுகளாலேயே பெரிய தொந்தரவாய்ப் போச்சு சார்! ஆண்டவனை தெரிசிக்கிற வேளையிலே கூட இந்தப் பிச்சைக்கார இழவு பெரிய இழவாப் போச்சு! மானங்கெட்ட கழுதைங்க—எங்கேயாவது கூலி வேலை செஞ்சு பிழைக்கிறத விட்டுவிட்டு பிச்சை கேட்க வந்துட்டான்—சோம்பேறிக் கழுதை!"—இது படித்த—ஆனால் பண்படையாத—'பரமண்டை' ஒன்றின் தீர்ப்பு.

அண்ட சராசரங்களையும் அணைத்துக் காத்தருள வேண்டிய அந்த ஆண்டவன்—திருட்டுக்காசில் நடக்கும் ஆடம்பர அணியாபரணங்களை சற்றேனும் வெட்கமில்லாமல் அழகாக அணிந்து கொண்டு—தங்க யானை மீதமர்ந்து—படாடோபமாக பவனி வந்து கொண்டிருந்தார். வாய் இருந்தால் அல்லவா கேட்க? கை யிருந்தால் அல்லவா குற்றவாளியைப் பிடித்துக் கொடுக்க! கேடு கெட்ட சமூகம்—இந்தக் கோலாகலத்தைப் பார்த்துக் கொண்டுதான் கிடந்தது...இரக்கமற்ற சமூகத்தின் சாபக் கேடாக-வீறிட்டு அலறியது அந்த மானங்கெட்ட பிச்சைக்காரப் பயலின் குரல்!

---

சிறுகதை:

# "மானங் கெட்டவன்"

வ. சம்பந்தன். B. A.

பசும் பொன் போன்ற தளிர் விட்ட மேனி. நெற்றி முழுவதிலும் திருமண்! அதன் நடுவே அழகானதொரு சந்தனப்பொட்டு—பரந்த வானில் பரிணமிக்கும் நிலவு போல! வெள்ளை வெளேரென துல்லிய துப்பைப் பூப்போன்ற உடையினிடையே லாகவமாகச் சுற்றி வளைந்து கொண்டு கிடக்கும் விசிறி மடிப்பு அங்கவஸ்திரம். பளீரென்று டால் வீசும் பச்சைசக்கல், பதித்த வைரக் கடுக்கன் காதிலே! பித்தளைப்பிடிபோட்ட ரிக்ஷாவிலே இத்யாதி குண விசேஷங்களுடன் 'ஜம்''மென்று வந்திறங்கும் மனுஷர் தான்—பிரபல இரும்புக்கடை முதலாளி நடேச செட்டியார் அவர்கள் என்று அந்தப் பக்கத்தில் உள்ளவர்கள் யாவருமே சொல்லி விடுவார்கள். "ரொம்பவும் கண்டிப்பான மனுஷர்—ஆனால் தங்கமான குணம்"-இதுதான் அவரைப் பற்றித் தெரிந்தவர்கள் என்று கூறப்படுகிறவர்கள் கொடுக்கும் சர்டிபிகேட்! வீட்டிலாகட்டும், கடையிலாகட்டும்—எந்தக் காரியத்திலாகட்டும்—செட்டியாரிடம் 'ரூல்'னா 'ரூல்'தான்!

காலை ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து விடுவார் செட்டியார் படுக்கையை விட்டு. அதற்கப்புறம் சொல்லிவைத்தாற் போல்-'டைம்' பிரகாரம் எல்லாக் காரியங்களும் ஒழுங்காக நடந்தேறும்! காலைக் கடன் முடித்து விட்டு—குளித்து விட்டு—பூஜையறையில் புகுந்தாரானால்—ஆண்டவனின் சன்னிதானத்தை விட்டு வெளியே வர குறைந்தது ஒரு மணி காலமாகும். திருமுருகாற்றுப்படையையும் கந்தர் சஷ்டியையும் கரைத்துத்தலைகீழாக ஒப்புவித்து விட்டு, பக்திப் பரவசத்திலே மூழ்கிக்கிடப்பார். "கற்பூரமாகக் கொளுத்திக் கொளுத்தித் தீர்க்கும் கைகள். பல்லாயிரந் தடவை பரமனின் கோயிலை வலம் வரும் பாதங்கள். நெற்றிக் கண்ணனை [illegible] நினைந்து நினைந்துருகும் [illegible]ம்"—இதுசெட்டியாருடைய [illegible] பிரவாகத்தைக்கண்டு—[illegible]வனுக்கு மட்டும் வாயிருந்[illegible] அவர் கொடுக்க வேண்டிய சர்டிபிகேட்! பூஜையறையை விட்டு வெளியில் வந்தாரானால்—உடை உடுத்து—சில்லறை, காரியங்களை எல்லாம் முடித்து விட்டு—"காதலாகிக் கசிந்துருகும்" தர்மபத்தினியிடம் விடைபெற்றுக் கொண்டு 'ஜம்'மென்று வந்து உட்காருவார் ரிக்ஷாவில்! இத்தனை நேரம் தெருவில் காத்துக்கிடந்த ரிக்ஷாக்கார கந்தன்—ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு ஓட வேண்டியது தான். 'படேல் லஞ்ச் ஹோமில்' டிபன் சாப்பிட்டால் தான் சாப்பிட்ட மாதிரி இருக்கும் செட்டியாருக்கு. வெளியே ரிக்ஷாக்கார கந்தன் காத்துக் கொண்டு கிடப்பான். கஞ்சியை காலையில் குடித்தானோ என்னவோ? அதைப்பற்றி செட்டியாருக்கு என்ன கவலை? "ஹேவ்" என்று ஏப்பம் விட்டுக் கொண்டே 'ரவேஸ்' வெத்திலை வாயில் மணக்க வந்து உட்காருவார் ரிக்ஷாவில். கடைக்குப்பக்கத்தில் தான் கந்தசாமிக் கோயில்! சாப்பிட்டு விட்டு கோயிலினுள் போகலாமா? அதற்காக ரிக்ஷாவிலிருந்தே 'எல்லாம் வல்ல எமபெருமானுக்கு' ஒரு கும்பிடு போட்டு விடுவார். பின்பு கடைக்குள் புகுந்தாரானால் பக்தி எல்லாம் பறந்தோடி விடும். 'பிஸினஸ்' விஷயந்தான் முன்னிற்கும்! மத்தியானம் சாப்பிட்டபிறகு வீட்டிற்குப் போய்விடுவார். போகும் பொழுதும் வரும் பொழுதும்—ரிக்ஷாவிலிருந்தே சாமிக்கு கும்பிடு போட மட்டும் மறக்கவேமாட்டார். ஆனால் பிஸினஸ் விஷயத்தில் ரொம்பவும் 'கரெக்டான' மனிதர். இரும்பு வியாபாரி அல்லவா? அதைப்போலவே வயிரம் பாய்ந்த நெஞ்சு. தைரியம் கூட! எத்தனை வருடமாக இந்தப் பிஸினஸ் நடத்துகிறார்! அவருக்குத் தெரியாத பிஸினஸ் தந்திரங்கள் கூட உண்டா? கடைமுடிந்து—வீட்டிற்குப் போய்—குளித்து விட்டு சிவப் பழமாய்க் காட்சி அளிப்பார் கோயிலிலே! இரும்புக்கடை நடேச செட்டியார் என்றாலே கோயிலில் கூட ஒரு தனி மதிப்பு தான். அவரைக்கண்டாலே ஓடி ஓடி உபசரிப்பார்கள் குருக்களையாக்கள்! — கந்தசாமி கோயில் டிரஸ்டிகளில் அவரும் ஒருவர் என்பதனால் வேறு அவருக்குத் தனி மரியாதை! சினிமா கினிமா என்று பேசக்கூடாது. வீடு உண்டு அவர் பிஸினஸ் உண்டு. கந்தசாமி கோயில் உண்டு. நேரம் இருந்தால் என்றாவது ஒரு நாள் பீச் பக்கம் பவனி! அதிலும் ரிக்ஷாவில் ஏறிக்கொண்டே, பீச் ரோட்டே போவது! அவ்வளவே தான்! ஆனால் சில சமயங்களில் மட்டும்—இந்த நியதி எல்லாம் கொஞ்சம் ஒதுக்கி வைக்கப்படும். 'பிஸினஸ்' அல்லவா? ஏதாவது 'விஷயம்' இருந்து கொண்டே யிருக்கும்! பல சமயங்களில் 'மேலதிகாரிகளை' கையில் போடவேண்டி யிருக்கும்! மற்றபடி பழைய நியதிதான்!

அன்று காலையில் கடைக்கு வர முடியவில்லை செட்டியாரால். கமிஷன் ஏஜண்டு—ராம்ஜி சேட்டைப் போய்ப் பார்க்கவேண்டியிருந்தது! மிக முக்கியமான விஷயம். ஒரு நல்ல கிராக்கி படிந்திருந்தது. பிளாக்மார்க்கெட்டில்நல்லசான்ஸ்! விடுவாரா செட்டியார்? ராம்ஜிசேட் ரொம்பவும் வேண்டியவன் அவருக்கு! போய்ப்பார்த்தார். இருதரப்பாருக்கும் பேரம் முடிவாகியது. நல்ல விலையில் இரும்பைத் தள்ள சம்மதித்தார் செட்டியார். இதற்கான வழி ராம்ஜி சொல்லிக் கொடுத்தான். இந்தப் பிசினசில் மொத்தம் இருபதாயிரம் லாபம் வந்தது சேட்டுக்கு ஐயாயிரம் தருகிறேன் என்று ஒத்துக்கொண்டார். சௌகார் பேட்டைக்கும்—இரும்புக்கடை பேட்டைக்கும் எம்பெருமான் கந்தசாமி கண் திறக்காமலா போய்விடுவார்! இந்த விஷயத்தை இரகசியமாக முடித்து விட்டு—வரும் வழியில், பக்கபலமிருந்து காரியத்தை நடத்தி வைத்த பகவான் கந்தசாமிக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு வந்து சேர்ந்தார் கடைக்கு!

வந்ததுமே வத்தி வைத்தான் கணக்கப்பிள்ளை இராகவய்யன் செட்டியாரிடம்—கடைப் பையன் பழனியைப் பற்றி!

"இன்னைக்கி கூட் பத்துமணிக்குத் தானுங்க கடைக்கு வந்தான் பழனி! "—ஆரம்பித்தான் அழுத பிள்ளையைக் கிள்ளிவிடும் படலத்தை அந்த அய்யன், செட்டியாரிடம்!

வெயிலில் வேர்க்க விறுவிறுக்க வந்த செட்டியாருக்கு கோபம்

வந்து விட்டது அவருக்குத் தான் ரூல்ஸ் ரூலாச்சே!

"ஏன் ராஸ்கல்! என்ன திமிர் ஏறிப்போயிட்டுதோ கழுதைக்கு! பெரிய ராஜாமாதிரி உன் இஷ்டத்திற்கு கடைக்கு வந்து போக ஆரம்பிச்சிட்டியா? உனக்கு கொட்டி அழ இங்கென்ன குவிச்சு வைச்சிருக்கு! கொஞ்சம் இடம் கொடுத்தா தலைக்குமேலே ஏறிட்டியா? முதலிலே கடையை விட்டு வெளியே நடடா கழுதே!"

பழனி நடுங்கிப்போய் நின்று கொண்டிருந்தான். சமூகத்தின் அடித்தட்டில் உழன்று வாழும் ஒளியிழந்த வாழ்க்கையின் சின்னமாக நின்றான் அவன். வயது பனிரெண்டு தான் இருக்கும். களையான முகம் தான். ஆனால் வயிறு தான் சூம்பிக் கிடந்தது. அவன் செய்த பிசகெல்லாம் கடந்த இரண்டு மூன்று நாட்களாக கடைக்குச் சரியாக ஒன்பது மணிக்கு வராமல் கொஞ்சம் காலந் தாழ்த்தி வந்தது தான்! பெற்றதாய் தனியாக வீட்டில் சுரமாக இருக்கிறாள். தகப்பன் இல்லை. மூன்று நாட்களாக அம்மாவுக்கு கொஞ்சம் சுரம் அதிகமாகவே ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய்க் கூட்டி மருந்து வாங்கிக் கொடுக்கப் போனான். ஆனால் பாழாய்ப்போன ஆஸ்பத்திரிக்குப் போனால் சீக்கிரம் வர முடிகிறதா என்ன? கொஞ்சம் நேரமாகி விட்டது. இன்றாவது சீக்கிரம் வந்து விடலாமென்று தான் நினைத்தான். ஆனால் இன்றும் நேரமாகி விடவே கஞ்சி கூட குடிக்காமல் ஓடிவந்தான் கடைக்கு! அப்படியும் ஒரு மணிநேரம் 'லேட்'டாகி விட்டது. கணக்கப்பிள்ளை இராகவ அய்யனுக்கு—பழனியைக் கண்டாலே கொஞ்சம் ஆகாது! எந்த அய்யனுக்குத்தான் எந்த திராவிடனைக் கண்டால் ஆகுது! ஆகவே இதைச் சாக்காக வைத்துக் கொண்டு வத்தி வைத்து விட்டான் செட்டியாரிடம்! முள்ளங்கிப் பத்தை போல் மாசம் பத்து ரூபாய் சம்பளமாகக் கொட்டி அழும் எந்த முதலாளி தான் இதைச் சகித்துக் கொண்டிருக்க முடியும்? வேலைக்காரப்பயல், நேரம் கழித்து வருகிறதாம் கடைக்கு அதைப்பார்த்து சும்மா இருப்பதாம் முதலாளி! அதிகாரம் செய்யாவிட்டால் அந்தஸ்து அல்லவா போய்விடும் முதலாளிக்கு! நடக்குமா நடேச செட்டியாரிடம் இந்த நாடகமெல்லாம்!

"என்னடா இடிச்ச புளிமாதிரி நிற்கிறே! ஏய் கணக்கப்பிள்ளை! அவனுக்கு இந்த மாச பாக்கியை பார்த்து கணக்கு தீர்த்து அனுப்பும். ஒழுங்காக இல்லாத கழுதை நமக்கு வேண்டாம். எங்காவது போய் கெட்டலைந்து நிக்கட்டும்! ஒரு கழுதையை காற்ற மெடுக்க அடிச்சால் தான் மற்ற இருக்கிற கழுதைங்களுக்குப் புத்தி வரும்!"

கணக்கப் பிள்ளை "கழுதை" பாக்கியைச் சொன்னான், "மூன்று ரூபா சொச்சம் ஆகுதுங்கோ!"

பழனி தட்டுத்தடுமாறிக் கொண்டே 'சாமி! சாமி! உங்க காலிலே வேணுமானாலும் விழறேனுங்க! ஆஸ்பத்திரிக்கு எங்க ஆத்தாவுக்கு சுரம்னு மருந்து வாங்கிக் கொடுக்கப் போனேங்க நேரமாயிட்டுதுங்க! வேண்டாம் சாமி! வேலையை விட்டு மாத்திரம் தள்ள வேண்டாங்க"—கதறினான்.

"ஆஸ்பத்திரிக்குப் போனாராம் துரை! உங்க அப்பன் வீட்டு பணம் என்ன யிங்கே அழிஞ்சி போயிட்டது! கணக்கப் பிள்ளை! பணத்தை வீசி, கழுதையை கழுத்தைப்பிடிச்சு வெளியே தள்ளு!"

நாகரிகச் சமூகத்தின்—மானங்கெட்ட சமூகத்தின் சாபக்கேடாக அங்கே சற்று நேரம் நின்றான் அந்த வேலைக்காரப் பழனி. நாகரிகச் சமூகத்தை எள்ளி நகையாடவே ஏற்பட்ட படைப்பாகவே அவன் அங்கே நின்றான். கருணைக் கடல்—ஏழைப பங்காளன்—கந்தசாமியின் கோயிலின் சற்று தொலைவிலே தான்—சமூகத்தின் மானக்கேடு—சாபக்கேடு— நாடகமாக நடந்து கொண்டிருந்தது!

ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அவன் கண்ணிலிருந்து வரவில்லை கீழே விழுந்த காசுகளைப்பொறுக்கி எடுத்துக் கொண்டே வெளியே சென்றான் அவன். தன்னைப் பெற்ற தாய்க்காக மருந்து வாங்கச் சென்று கொஞ்ச நேரம் கழித்து வந்தற்காக வேலையை விட்டு விரட்டப்பட்ட அந்தப் பாட்டாளி—உல்லாச புரியில் உலாவும் உன்மத்தர்களின் கையாளான சமூகத்தையும் கடவுளையும் காரித்துப்பி விட்டுச் சென்றான்.

"கணக்கப் பிள்ளை! போய்சுப்பு மணியன் கடையில் ஒரு "கூல் டிரிங்ஸ்" வாங்கிண்டு வாரும்" என்று ஆர்டர் போட்டார் முதலாளி செட்டியார்!

* * *

காலம் பறந்தோடி விட்டது. மாதங்கள் ஆறு ஆகி விட்டன. ஒரு மாடி வைத்துக் கட்டியிருந்த செட்டியாரின் வீடு—இரண்டு மாடி வீடாகி விட்டது. இன்னும் இரண்டு வீடுகள் டவுனில் செட்டியாருக்குச் சொந்தமாகிவிட்டது. ரிக்ஷா போய் கார் வந்தது அதனிடத்தில்! ஆனால் அந்த வேலைக்காரப் பையன் பழனியின் கதி என்ன? யாருக்குத் தெரியும்! செட்டியாருக்கு அதைப் பற்றி என்ன கவலை? ராம்ஜி சேட்டின் கூட்டுறவு—பணமாகக் குவித்துக் கொட்டியது பிளாக் மார்க்கட் வியாபாரத்தில் அவருக்கு!

அன்று கந்தசாமிக் கோயில் ஐந்தாம்நாள் பிரமோற்சவம்! தந்த யானையின் மீது ஆண்டவன் பவனி. இரும்புக்கடை நடேச செட்டியார் உபயம். கேட்க வேண்டுமா ஆடம்பரத்தை? மற்ற நாள் உற்சவங்களைக் காட்டிலும் ஒருபடி மேலாக நடத்தி விட திட்டம போட்டு விட்டார் செட்டியார்! இல்லையென்றால் அவர் அந்தஸ்து என்ன ஆவது? கோலாகலமாக — தந்த யானை மீதமர்ந்து—ஆண்டவன், அடியார்களுக்கு ஆனந்த தரிசனம் அளிக்க ஊர்வலமாக வந்து கொண்டிருந்தார். முன்னே நாதசுரம் மேள வாத்தியங்கள் முழங்க, பக்தர்கள் கை கூப்பி நிற்க— அம்மன்களின் கடாட்சத்திற்கு இளங்கா… கள் ஏங்கி நிற்க — நாரீமணிகள் முன்னே நடனம் புரிய—விளக்கொளியில் வைர நகைகள் டால் வீச-வள்ளி தெய்வயானை இருப… கங்களிலும் அமர்ந்திருக்க பவனி வந்து கொண்டிருந்தார் பரந்தாமன்!

(10-ம் பக்கம் பார்க்

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliya at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A.